

நீலகிரி மாவட்டம், உதகை மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்ட திறந்தவெளி விளையாட்டு மைதானத்தில் தமிழ் நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் முதலமைச்சர் கோப்பை 2024க்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் உள்ளனர்.

### மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமை!

# கோவை தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### இரா.தி.சபாபதி மோகன் - மு.கண்ணப்பன் - கே.ஈஸ்வரசாமி எம்.பி. சிறப்புரை!

கோவை, செப். 13 -

திராவிட மாடல் ஆட்சி நாயகர், முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர், மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி ஆகியோர் வழிகாட்டுதலிலும் கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் 10.09.2024 அன்று பெரிய நெகமம் பேரூர் கழகம் ஸ்ரீ தங்கவேல் அய்யன் கே.வி.கே திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் வரவேற்றார்.

கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமை வகித்தார். மாவட்ட அவைத் தலைவர் கே.வி சுப்பிரமணியன், மாவட்டக் கழக துணை செயலாளர்கள் ப.க. சாமி நாதன், சி.பொன்னுச்சாமி, திருமதி. செ. கனிமொழி, மாவட்ட கழக பொருளாளர் ஜெயப்பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் முன்னாள் துணைவேந்தர்,கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் இரா.தி.சபாபதி மோகன் , கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் மு கண்ணப்பன் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். இக்கூட்டத்தில் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி , மாநில விவசாய அணி துணைத் தலைவர் இரா.தமிழ்மணி , மாநில நெசவாளர் அணி செயலாளர் கே.எம்.நாகராஜ், கழக சட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, கழக செய்தித் தொடர்பு துணை செயலாளர் பொள்ளாச்சி சித்திக், மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் பணப்பட்டி தினகரன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இருகூர் சந்திரன், மு.க.முத்து, ஏர்போர்ட் எம்.ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பெரியநெகமம் பேரூர் கழகச் செயலாளர் ராசு (எ) முத்துக்குமார் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி,பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், நகராட்சி தலைவர்கள், ஊராட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் 1500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை மத்திய, வடக்கு, தெற்கு மாவட்ட

# மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### ஹெலன் டேவிட்சன், காரல் மார்க்ஸ், ரேகா பிரியதர்சினி, ரத்னா லோகேஷ்வரன் முன்னிலை!

தஞ்சை, செப்.13–

தலைமைக் கழக அறிவிப்பிற்கிணங்க தஞ்சாவூர் மத்திய. வடக்கு, தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணியின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தஞ்சை மத்திய மாவட்ட கழக செயலாளரும், திருவையாறு சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகர், தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாணசுந்தரம், எம்.பி., தஞ்சாவூர் தெற்கு மாவட்ட கழக செயலாளரும், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினருமான அண்ணாதுரை, எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்கள்.

மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் காரல் மார்க்ஸ்,மாநில சமூக வலைதள பொறுப்பாளரும், தஞ்சை மண்டல மகளிர் அணி பொறுப்பாளருமான ரேகா பிரியதர்ஷினி, மாநில சமூக வலைதள பொறுப்பாளரும், தஞ்சை மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளருமான ரத்னா லோகேஷ்வரன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்


கூட்டத்தில் மகளிர் அணி ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்கள். புதிதாக உறுப்பினர் சேர்க்கை, கழக அரசின் சாதனைகளை இல்லந்தோறும் திண்ணைப் பிரச்சாரம் வாயிலாக கொண்டு சேர்த்தல், கழக முப்பெரும் விழாவில் குடும்பத்தோடு கலந்து கொள்ளுதல், இல்லந்தோறும் கழக இரு வண்ணக் கொடி பட்டொளி வீசி பறக்க செய்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் நீலமேகம். தஞ்சை மாநகராட்சி மேயர் சன் ராமநாதன். மாநில மருத்துவர் அணி துணை செயலாளரும், துணை மேயருமான மருத்துவர் அஞ்சுகம்பூபதி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் ரமணி, செல்வநாயகி, சுபா திருநாவுக்கரசு, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர்கள் கமலா ரவி, அசோக ராணி, கௌரி, மாநகர அமைப்பாளர் ரம்யா சரவணன், மாநகர தொண்டணி அமைப்பாளர் தமிழரசி ராஜா, மாவட்ட மகளிர் அணி தலைவர்கள், மகளிர் அணி துணை தலைவர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### லேனா (எ) இரா. இலக்குமணன்

### செப்டம்பர் 13 (1998)



கழகம் தொடங்கிய காலந்தொட்டு உறுப்பினராகி, சுமார் நாற்பது ஆண்டு காலமாக தனது பகுதியில் கழக வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்.

திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக ஒரு முறையும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதோடு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று ஆறு மாத சிறைவாசம் அனுபவித்தார். 'மொழிப்போர்த் தியாகி' என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

### பேறறிஞர் அண்ணா பிறந்தநாள் கழக பவளவிழா ஆண்டை முன்னிட்டு

# திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகங்களில் கொடியேற்று விழா!

### மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை !



15.09.2024 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், கழக பவளவிழா ஆண்டை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவெறும்பூர், திருச்சி கிழக்கு மற்றும் மணப்பாறை சட்ட மன்ற தொகுதிகளில் மாவட்ட கழகத்தால் அமைக்கப்பட்ட 70 அடி உயர கொடிக்கம்பங்களில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கொடியேற்றி நிகழ்வை துவக்கி வைப்பார்கள். அதனை தொடர்ந்து திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழகங்களில் உள்ள கொடிக்கம்பங்களில் ஆங்காங்கே உள்ள கழக முன்னோடிகளுடன் இணைந்து மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கழக கொடியேற்றி சிறப்பிப்பார்கள். எனவே ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் நிகழ்ச்சிகளை சிறப்பாக ஏற்பாடு செய்திட கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு : கீழ்க்கண்டபடி பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் அட்டவணையில் வழங்கிய கொடிக கம்பங்களின் எண்ணிக்கையில் குறையாமல் மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கொடியேற்றிட ஏற்பாடு செய்திட வேண்டும். மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கொடிக்கம்பங்களின் எண்ணிக்கையை சரிபார்த்து கொடியினை ஏற்றிட வேண்டும்.

| தொகுதி | பகுதி/ஒன்றியம்/ நகரம்/பேரூர் | கொடிக்கம்பம் அமைந்துள்ள இடம் | கொடியேற்றுபவர் | தலைமை |
|---|---|---|---|---|
| திருச்சி கிழக்கு தொகுதி | மலைக்கோட்டை பகுதி | சஞ்சீவி நகர் | அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாவட்ட கழக செயலாளர் | மு.மதிவாணன் மாநகர செயலாளர் |
| திருவெறும்பூர் தொகுதி | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | குண்டூர் பர்மா காலனி | வண்ணை அரங்கநாதன் தலைமை செயற்குழு உறுப்பினர் | C.கங்காதரன் ஒன்றிய செயலாளர் |
| மணப்பாறை தொகுதி | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வையம்பட்டி சுங்கசாவடி | K.N.சேகரன் தலைமை செயற்குழு உறுப்பினர் | VA.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் |
| திருச்சி கிழக்கு தொகுதி | கலைஞர் நகர் பகுதி | கலைஞர் சிலை T.V.S.டோல்கேட் | மு.மதிவாணன் மாநகர கழக செயலாளர் | G.மணிவேல் பகுதி செயலாளர் |
| திருவெறும்பூர் தொகுதி | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | தேவராயநேரி | கவிஞர் சல்மா மாநில அணி செயலாளர் | KSM.கருணாநிதி ஒன்றிய செயலாளர் |
| மணப்பாறை தொகுதி | பொன்னம்பட்டி பேரூர் | துவரங்குறிச்சி சுற்றுச் சாலை | P.M.சபியுல்லா தலைமை செயற்குழு உறுப்பினர் | KA. நாகராஜ் பேரூர் செயலாளர் |
| திருச்சி கிழக்கு தொகுதி | மலைக்கோட்டை பகுதி | குடமுருட்டி பாலம் | எஸ்.இனிகோ இருதயராஜ் சட்ட மன்ற உறுப்பினர் | R.மோகன் பகுதி செயலாளர் |
| திருவெறும்பூர் தொகுதி | காட்டூர் பகுதி | கலைஞர் சிலை ஆயில்மில் பஸ்ஸ்டாப் | ஜி.திவ்யா துணை மேயர் | O.நீலமேகம் பகுதி செயலாளர் |
| மணப்பாறை தொகுதி | மணப்பாறை நகரம் | கலைஞர் சிலை மாட்டுச்சந்தை அருகில் | N.செந்தில் மாநில அணி செயலாளர் | மு.ம. செல்வம் நகர செயலாளர் |

| பகுதி / ஒன்றியம் / நகரம் / பேரூர் | தலைமை | கொடிகளின் எண்ணிக்கை | கொடியேற்றுவதற்கு மாவட்ட கழகத்தால் அனுப்பப்படும் பிரதிநிதிகள் |
|---|---|---|---|
| மலைக்கோட்டை பகுதி | R.மோகன் பகுதி செயலாளர் | 26 | B.A.நூர்கான் கோவி.நாகராஜ் |
| மார்க்கெட் பகுதி | RG.பாபு பகுதி செயலாளர் | 25 | பொன். செல்லையா S. இப்ராஹிம் |
| பாலக்கரை பகுதி | T.P.S.S.ராஜ் முஹம்மது பகுதி செயலாளர் | 32 | N.தமிழ்செல்வன் A.P.ரகுநாதன் |
| கலைஞர் நகர் பகுதி | G.மணிவேல் பகுதி செயலாளர் | 30 | ஆறு.சந்திரமோகன் PM.குறிஞ்சிமன்னன் |
| அரியமங்கலம் பகுதி | A.M.G.விஜயகுமார் பகுதி செயலாளர் | 28 | KKK.கார்த்தி MR.முத்துதீபக் |
| பொன்மலை பகுதி | E.M.தர்மராஜ் பகுதி செயலாளர் | 32 | U.ராஜேஸ்வரன் A.வெங்கடேஷ்குமார் |
| காட்டூர் பகுதி | O.நீலமேகம் பகுதி செயலாளர் | 25 | K.A.V.தினகரன் ப.சரவணன் |
| திருவெறும்பூர் பகுதி | S.சிவக்குமார் பகுதி செயலாளர் | 20 | S.அடைக்கலராஜா C.M.மெய்யப்பன் |
| வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | V.A.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் | 21 | K.N.சேகரன் M.C.சிவக்குமார் |
| வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | R. சீரங்கன் ஒன்றிய செயலாளர் | 40 | ந.ப.மனோகரன் கா.முத்து வெங்கடேஷ் |
| மணப்பாறை நகரம் | மு.ம.செல்வம் நகர செயலாளர் | 39 | N.செந்தில் ஆ.ஜெகதீசன் |
| மணப்பாறை ஒன்றியம் | C.ராமசாமி ஒன்றிய செயலாளர் | 83 | R. குணசேகரன் J.J.மகேஸ் |
| மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | C.சின்னடைக்கன் ஒன்றிய செயலாளர் | 30 | அ.த.த. செங்குட்டுவன் M.ஜியாவுதீன் |
| பொன்னம்பட்டி பேரூர் | K.A.நாகராஜ் பேரூர் செயலாளர் | 20 | லீலா வேலு V.பொற்கொடி |
| மருங்காபுரி மத்திய ஒன்றியம் | M.பழனியாண்டி ஒன்றிய செயலாளர் | 21 | P.M.சபியுல்லா A.முஹம்மது அசாருதீன் |
| மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | C.செல்வராஜ் ஒன்றிய செயலாளர் | 35 | N.கோவிந்தராஜ் N.செந்தமிழ்செல்வன் |
| திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | C.கங்காதரன் ஒன்றிய செயலாளர் | 32 | வண்ணை அரங்கநாதன் RP.சுந்தர்ராஜன் |
| திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | K.S.M. கருணாநிதி ஒன்றிய செயலாளர் | 48 | கவிஞர் சல்மா S.பன்னீர்செல்வன் |
| துவாக்குடி நகரம் | E.காயாம்பு நகர செயலாளர் | 26 | P.கிருஷ்ண கோபால் D.செந்தில் |
| கூத்தைப்பார் பேரூர் | MRTPK. தங்கவேல் | 20 | G.ரமேஷ் K.லோகநாதன் |

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி, ஒன்றிய, நகர பேரூர், வட்ட, வார்டு கிளை கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், மாவட்ட, மாநகர சார்பு அணிகளின் தலைவர், துணை தலைவர், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து பிரதிநிதிகள் மற்றும் கழக தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.